OS.No.: 10/2019

நாள் : 24.09.2024

வா.சா. : 1

பெயர் : மோகனா

1, 4, 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் அப்பா வடிவேல் இறந்தது 1978 ல். என் அம்மா திரிபுரம் எப்போது இறந்தார் என்று ஞாபகம்இல்லை. சுமார் பத்து வருடங்கள் இருக்கும். நான்கு ஐட்ட சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ. 1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் எனது தகப்பனார் வடிவேலின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரி. 20.01.1962 ல் வாசாஆ 4 ஆவணம் மூலம் என் அம்மா பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்தும் எனது அப்பா சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால் சரி. என் அம்மாவிற்கு அவரது தாய் வீட்டில் இருந்து சொத்து எதுவும் சீதனமாக கொடுக்கவில்லை என்றால் சரி. என் தாயார் எழுதி வைத்த உயில் பத்திரத்தின் நகல் வாசாஆ.6 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதன் நகல் எப்போது மனுப்போட்டு வாங்கப்பட்டது என்றால் கேஸ் போடுவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு 2019. அந்த உயில் பத்திரத்தில் தனது மூன்று மகன்களான 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் சொத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. உயில் பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் என் தெருவை சேர்ந்த இரண்டு பேரும். மற்றொருவரும் சாட்சி கையெழுத்துபோட்டிருக்கிறார்கள். அந்த மற்றொருவர் யார் என்று தெரியவில்லை. எங்கள் தெருவை சேர்ந்த சாட்சி கையெழுத்துபோட்ட இருவரும் இறந்து விட்டார்கள். உயில் பத்திரத்தை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. என் அம்மா ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்றாலும் அதை வாசாஆ. 7 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி என் அம்மா இறந்த பின்பு தான் தெரிய வந்தது. அந்த செட்டில்மெண்ட்ல் தாவாவில் கண்ட எந்த ஐட்ட சொத்து எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தில்தான் 2 ம் பிரதிவாதி ஆறுமுகம் கடை வைத்திருக்கிறார். 2 ம்

பிரதிவாதி ஆறுமுகத்திற்கு வேறு வேலை இல்லை என்றால் சரி. அவர் படிக்கவில்லை. அவர் கடைதான் வைத்திருக்கிறார். 1ம் பிரதிவாதி சேகர் நிறைய படித்திருக்கிறார். அவர் பிரைவேட் கம்பெனியில் வேலை பார்த்து ஓய்வுபெற்று விட்டார். 3ம் பிரதிவாதி பழனி நிறைய படித்திருக்கிறார். professor ஆக இருந்து ஓய்வு பெற்று விட்டார். வாசாஆ. 7 ஆவணத்தில் யார் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வாசாஆ 7 ஆவணம் எங்கு யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. வாசாஆ 8 ஆவணமாக நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. வாசாஆ 9 ஆவணமாக 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலமாக வாதிகளுக்கு அனுப்பிய நோட்டீஸ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் எதனடிப்படையில் பாகம் கேட்டுள்ளேன் என்றால் தாவா சொத்துக்கள் என் அப்பாவின் சுயசம்பாத்திய சொத்துக்கள் அதில் எங்கள் அனைவருக்கும் சமபாகம் உண்டு என்று கேட்கிறேன். என் அம்மா செட்டில்மெண்ட் பத்திரம், உயில் எழுதி வைத்திருப்பதாக சொல்வது சந்தேகத்திற்குரியது. தாவா வில் கண்ட சொத்துக்கள் அனைத்து என் அப்பாவின் பணத்தை கொண்டு வாங்கப்பட்டவை என்றால் சரி. தாவா பாரா 3ல் நாங்கள் அனைவரும் பொது குடும்ப சொத்தாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதே பாராவில் என் அம்மா இறப்பதற்கு ஐந்து, ஆறு வருடத்திற்கு முன்பு சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு இருந்ததாகவும், அவருக்கு ஞாபக சக்தி குறைவு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. இந்த வழக்கில் சேகர் என்ன கட்சி ஆடுகிறார் என்று அது பற்றி தெரியுமா என்றால் என் அப்பாவிற்கு நல்ல பழக்கவழக்கம் இல்லை என்று சொல்லியுள்ளார் அது தவறு. என் அம்மாவும் அப்பாவும் ஒற்றுமையாகத்தான் குடும்பம் நடத்தினார்கள். என் சகோதரிகளுக்கு பாகம் உண்டு என்று வழக்குரையில் ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஆமாம். நான் தான் மூத்த மகள் என்றால் சரி. 1974 ல் எனக்கு திருமணம் நடந்தது. 2 மற்றும் 3 வாதிகளுக்கு அதன்பிறகு இரண்டு, மூன்று வருடங்களுக்கு பிறகு திருமணமானது. எனது சகோதரர்கள்தான் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால்

சரியல்ல. என் அம்மா நிலத்தில் வரும் வருமானத்தின் மூலமும் ஸ்டேட் பேங்குக்கு வாடகைக்கு விட்டிருந்தார்கள் அந்த வருமானம் மூலமும் என் சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தார். எங்களுக்கு சொந்த வீடு இருந்தது. அதனால் வீட்டு வாடகை கொடுக்கும் அவசியம் இல்லை. இந்த வழக்கில் கண்ட சொத்தை நாங்கள் பொதுவில் அனுபவிக்கவில்லை என்றாலும் காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலாவதி தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் உரிமையற்று போய்விட்டது என்றல் சரியல்ல. என் அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லாத நிலையில் சொத்தில் பாகம் கேட்க வேண்டாம் என்றிருந்தோம். அதன்பிறகு சொத்தில் பாகம் கேட்டபோது பிரதிவாதிகள் காலம் கடத்தி விட்டார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் கேட்டு நோட்டீஸ் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். நாங்கள் எவ்வளவு பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்தில் சமபாகம் கேட்டுள்ளோம். நாங்கள் உடன் பிறந்தவர்கள் எட்டுபேர் எல்லோருக்கும் சமபங்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். என் அம்மா எழுதி வைத்த உயில் மற்றும் செட்டில்மெண்ட் செல்லாது என்று வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் தான் சொல்லியிருக்கிறோம். நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் அப்பா வடிவேல் செட்டியாருக்கு சீர்காழிதான் பூர்வீகம். அவருக்கு பூர்வீகசொத்து எதுவும் கிடையாது. என் அப்பா எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். என் அப்பா 52 வயதில் இறந்து விட்டார் என்றால் சரி. அவருக்கு கல்லீரல் நோய் இருந்தது என்றால் இருக்கலாம். என் அப்பா முதலில் டீக்கடை வைத்திருந்தார் அந்த கடையில் டீ, காலை டிபன், மதிய சாப்பாடு, இரவு உணவு அனைத்தும் உண்டு. இரவு 01.00 மணிவரை நடக்கும். பிறகு பேட்டா ஷோரூம் வைத்திருந்தார். அந்த கடை இரவு 01.00 மணிவரை நடக்கும் என்றால் சரி. என் அப்பாவும் அம்மாவும் அந்தக்கடையை பார்த்துக்கொண்டார்கள் என்றால் என் அப்பாதான்

பார்த்துக்கொண்டார். என் அம்மா house wife தான். வீட்டில் இருந்து தான் கடைக்கு தேவையான உணவு பொருட்கள் போகும் என்றால் வடை சுட்டுக்கொடுப்பார். மாவு அரைத்துக்கொடுப்பார். மற்ற சமையல் கடையில் தான் நடக்கும். கடைசிவரை என் அம்மாவும் அப்பாவும் ஒற்றுமையாக கடையை நடத்தினார்கள் என்றால் சரி. என் அப்பா நடத்தி பேட்டா ஷோரூம் கடையை லாஸ் ஆகிவிட்டதால் மூடிவிட்டார் என்றால் ஒரு ஐந்து, ஆறு வருடம் நடத்தினார். உடம்பு முடியாததால் மூடிவிட்டார். எந்த வருடம் மூடினார் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு அப்போது சின்ன வயது. என் அப்பா சாராயக்கடையை லீஸ்க்கு எடுத்து நடத்தினார் என்றால் சரி. எந்த வருடத்தில் என்றால் 1967, 1968 ல் நடத்தினார். அதையும் மூடிவிட்டார் என்றால் சரி. உடம்பு சரியில்லாததால் மூடிவிட்டார். ஒரு வருடம் நடத்தினார். என் அப்பா அவர் நண்பர்களுடன் சேர்ந்து அடிக்கடி வெளியூர் போவார் என்றால் அப்படி போனது மாதிரி தெரியவில்லை. அவர் வெளியூர் போனால் கடை எப்படி நடத்த முடியும். கடை நடத்துவதற்காகவும் குடிப்பழக்கத்தினாலும், மூன்றாவது ஐட்ட சொத்தை அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா உடல் நலம் சரியில்லாமல் இரண்டு வருடம் படுத்திருந்தபோது கூட அந்த இடத்தை விற்க முன்வரவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் அவர் பட்ட கடனுக்காக பிஸ்னஸ்காக மூன்றாவது ஐட்ட சொத்தை அடமானம் வைத்தார் என்றால் சரியல்ல. என் தாயார் திரிபூரத்திற்கு தென்னலக்குடி, சீர்காழி பூர்வீகம் என்றால் சரி. என் அம்மா உடன் பிறந்தவர்கள் சேது என்பவர். என் அம்மா வழி தாத்தா பெயர் சின்னத்தம்பி செட்டியார் என்று நினைக்கிறேன். என் தாய் வழி பாட்டி பெயர் ராஜாம்பாள். என் அம்மா வழி தாத்தா, பாட்டிக்கு தென்னலங்குடியில் நிலம் சொத்துக்கள் இருந்தது என்றால் சரியல்ல. எந்த சொத்தும் இல்லை. என் அம்மாவிற்கு திருமணத்தின்போது 200 பவுன் நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. தோடு, மூக்குத்திதான் போட்டார்கள். அது எனக்கு எப்படி தெரியும் என்றால் என் அம்மா என் பாட்டியிடம் தோடு, மூக்குத்தி தான் போட்டாய் என்று சண்டை போடுவார் அதனால் தெரியும். தென்னலங்குடியில் என் அப்பா சாகுபடி செய்தார் என்றால் சரியல்ல. என் அப்பா அங்கு போகவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் தென்னலங்குடியில் என் தாய் வழி தாத்தா

பாட்டிக்கு நிலபுலம் இருந்தது என்றாலும் அதை என் அப்பா தான் சாகுபடி செய்துவந்தார் என்றாலும் சரியல்ல. எனக்கு மட்டும் தான் என் அப்பா திருமணம் செய்து வைத்தார்என்றாலும் மற்ற யாருக்கும் திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் சரி. மற்றவர்களுக்கு என் அம்மா செய்து வைத்தார். பத்மா, சுமதி, அமுதா, பிரேமா ஆகியோருக்கு எந்தெந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. இரண்டு, மூன்று வருடத்தில் திருமணம் நடந்தது. எனக்கு திருமணத்தின்போது என் அப்பா 12 சவரன் நகைபோட்டார். பத்மா, சுமதி, அமுதா, பிரேமா ஆகியோருக்கு என் அம்மா திருமணத்தின் போது தலா 12 சவரன் நகைபோட்டார். திருமண செலவுகளை மாப்பிள்ளை வீட்டார்தான் செய்தார்கள். இரண்டாவது ஐட்ட சொத்தை பத்மா திருமணத்திற்காக விற்றார்கள் என்றால் சரி. ஆனால் அதில் இன்னும் கொஞ்சம் நிலம் உள்ளது. நான் திருமணத்திற்கு பிறகு என் கணவர் ஊரில்தான் இருந்தேன் என்றால் இல்லை. என் கணவர் வேலை பார்த்த ஊர்களில் இருந்தேன். அந்த நிலங்களில் எவ்வளவு விளையும் என்றால்10 மா நிலத்தில் 100 மூட்டை நெல் விளையும். 80 மூட்டையை பத்தாயத்தில் கொட்டி வைத்து விட்டு 20 மூட்டையை வீட்டிற்கு வைத்துக்கொள்வோம். 80 மூட்டையை பின்னிட்டு என் அப்பா விற்பார். அப்போது ஒரு மூட்டை நெல் 100 ரூபாய். நான் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் அந்த காலத்தில் ஒரு மூட்டை 03.50 பைசா என்றாலும் ஐந்தாயிரம் ரூபாய்தான் நிலத்தின் மூலம் வருமானம் வரும் என்றால் சரியல்ல. மூன்றாவது ஐட்ட சொத்தின் வாடகை வருமானம் எனக்கு தெரிந்து 500 ரூபாய். அதன்பிறகு எனக்கு திருமணமாகிவிட்டது. திருமணத்திற்கு பிறகு நிலத்தில் இருந்து வரும் வருமானத்தில் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. நான்கு பெண்ணையும் மூன்று மகனையும் என் அம்மா திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். அதற்கே அந்த வருமானம் சரியாகிவிடும். ஐந்து பெண்களும் என் அம்மா வீட்டிற்கு எப்போதாவது வந்து போவது தான் என்றால் சரி. எல்லா பெண்களும் அப்படிதான். என் பெரிய தம்பி சேகர் நன்றாக படித்து சென்னையில் வேலை பார்த்து செட்டில் ஆகிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சென்னையில் அவருக்கு வீடு உள்ளது. அவர் ஊரை விட்டு போய்

முப்பது வருடம் இருக்கும் என்றால் இருக்கலாம். அவரது தம்பி பழனி பாண்டிச்சேரியில் லெக்சரர் என்றாலும் அவருக்கு அங்கு வீடு உள்ளது என்றால் சரி. அவர் சீர்காழியை விட்டு போய் 25 வருடங்கள் இருக்கும் என்றால் இருக்கலாம். சீர்காழிக்கு ஞாயிற்று கிழமைகளிலும் விஷேச நாட்களிலும் வந்து போவார். 2ம் பிரதிவாதி ஆறுமுகம் படிக்கவில்லை என்றால் அவருக்கு படிப்பு வரவில்லை படிக்கவில்லை. 2ம் பிரதிவாதி ஆறுமுகம் தான் குடும்பத்தையும், வீட்டையும், நிலத்தையும், கடையையும் பார்த்துக்கொண்டு வாடகை வசூல் செய்வது போன்ற வேலைகளை பார்த்து என் அம்மாவுக்கு உதவியாக 40 வருடகாலமாக இருந்தார் என்றால் சரியல்ல. எல்லா வருமானத்தையும் அவர்தான் எடுத்துக்கொண்டார். மூன்றாவது ஐட்ட சொத்திலும் அவர்தான் கடை வைத்திருக்கிறார். தாவா இரண்டாவது ஐட்ட சொத்தில் இருந்த வீட்டில் தான் என் அம்மாவும் ஆறுமுகமும் இருந்தார்கள் என்றால் என் அம்மா வீட்டில்தான் ஆறுமுகம் இருந்தார். தற்போது ஆறுமுகத்திற்கு 63 வயதிருக்குமா என்றால் இருக்கும். இந்த 63 வருட காலமாக 2வது ஐட்ட சொத்தில் உள்ள வீட்டில்தான் 2ம் பிரதிவாதி ஆறுமுகம் உள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மா இறந்த பிறகு தான் அந்த வீட்டில் இருக்கிறார். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், 63 வருடங்களாக 2வது ஐட்ட சொத்தில் உள்ள வீட்டில்தான் என் அம்மாவை வைத்து ஆறுமுகம் அவர் இறக்கும்வரை பராமரித்தார் என்றால் சரியல்ல. என் அம்மாவை அவர் யார் கூப்பிட்டும் அனுப்பவில்லை. அவர்கள் சொத்தை எழுதி வாங்கிவிடுவார்கள் என்று நினைத்து என் அம்மாவை அவருடன் வைத்துக்கொண்டார். என் அம்மாவிற்கு இறப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்பிலிருந்து தீவிர சர்க்கரை நோய் இருந்தது என்றால் சரி. ஆறுமுகம் தான் என் அம்மாவை பாண்டிச்சேரி மருத்துவமனையில் வைத்து லட்சக்கணக்கில் செலவு செய்து பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. பாண்டிச்சேரி மருத்துவமனைக்கு அழைத்து போவார். லட்சக்கணக்கில் செலவு செய்யவில்லை. ஐந்து சகோதரிகளும் என் தாயாரின் மருத்துவசெலவுக்கு எந்த செலவும் செய்யவில்லை என்றால் சரி. நாங்கள் கொடுத்தாலும் எனக்கு வாடகை வருகிறது வேண்டாம் என்று திருப்பி கொடுத்துவிடுவார். என் தாயார் டீக்கடையை

நடத்தி அதில் வந்த வருமானத்தை கொண்டு நான்காவது ஐட்ட சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் அப்பாதான் என் அம்மா பெயரில் எழுதி வைத்தார். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 7 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் அம்மா கையெழுத்து என்றால் என் அம்மா கையெழுத்து போல் தெரியவில்லை. என் அம்மாவின் கையை பிடித்து யாரோ எழுதியதுபோல் தெரிகிறது. இந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் இருக்காது. அந்த ஆவணத்தில் கண்ட சொத்து 2 ம் பிரதிவாதி ஆறுமுகம் டைல்ஸ் கடை நடத்தி வரும் சொத்து என்றால் சரி. முதலில் அந்த இடத்தில் கடை வைத்து விட்டார். அதன்பிறகு அந்த சொத்தை என் அம்மா எழுதி கொடுத்து விட்டதாக சொல்கிறார். என் அம்மா இருந்த காலத்தில் இருந்து சுமார் 20 வருடமாக அங்கு டைல்ஸ் கடை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. என் அம்மா இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு அங்கு டைல்ஸ் கடை வைத்திருப்பார். அந்த ஆவணத்தில் ஆறுமுகம் தன்னுடன் இருந்துகொண்டு பல வருடங்களாக தன்னை கவனித்து கொண்டு மருத்துவம் மற்றும் தேவைகளை கவனித்து கொண்டு வருவதாலும் அவர் அதிகம் படிக்காததாலும் குடும்ப பொறுப்புகளையும் சொத்துக்களையும் முதலில் இருந்து பார்த்து கொண்டு வருவதாலும் அவர் மீது கொண்ட அன்பினாலும் பாசத்தினாலும் தொழில் செய்ய நிரந்தரமாக கடைத்தெருவில் ஒரு இடம் வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைப்பதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட பத்திரம் எழுதி வைப்பதற்கு முன்பே 4 வது ஐட்ட சொத்திற்கான பட்டா EB bill, வரிரசீது ஆகியவை என் அம்மா பெயரில் இருந்தது என்றால் சரி. செட்டில்மெண்ட்க்கு பிறகு பட்டா EB bill, வரிரசீது ஆகியவற்றி பெயர் மாற்றம் செய்து கொண்டு ஆறுமுகம் வசம் அந்த சொத்து உள்ளது என்றால் அவர் அந்த சொத்தை கொடுக்க மாட்டேன் என்று வைத்துக்கொண்டிருக்கிறார் என்ன செய்வது. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் 4 வது ஐட்ட சொத்து குறித்து அந்த சொத்து தனக்கு உரியது என்று நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரி. என் அம்மா பெயரில் பிரியமாக எழுதி வைத்தார். என் அம்மா, அப்பா உயிருடன் இருக்கும் ்வரை இந்த சொத்தில் பாகம் கேட்கவில்லை. வக்கீல் நோட்டீஸ்

அனுப்பவில்லை என்றால் சரி. என் அப்பா உயிருடன் இருக்கும்போது எப்படி பாகம் கேட்கமுடியும். நாங்கள் ஐந்து சகோதரிகளும் சேர்ந்து தாயார் இறந்த பிறகு பாகம் கேட்போம் என்று இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால்தான் பாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா 4 வது ஐட்ட சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்றாலும் அது பாகத்துக்கு கட்டுப்படாது என்றால் சரியல்ல. என் அப்பா என் அம்மா பெயரில் ரிஜிஸ்டர் செய்யவில்லை. சும்மா பாதுகாப்பிற்காக எழுதிதான் வைத்திருக்கிறார். நாங்கள் ஐந்து சகோதரிகளும் அந்த சொத்தை கூட்டுக்குடும்ப சொத்தாக பாவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மாவை சகோதரிகள் ஐந்துபேரும் வந்து பார்க்கவில்லை கவனிக்கவில்லை என்றாலும் இப்போது பாகம் கேட்டு வழக்கு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

6 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே, குறுக்கு விசாரணை இல்லை.